

SEDR

Supporting Effective Dispute Resolution
ඵලදායීව ආරවුල් නිරාකරණයට සහයවීම
பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை
தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

# நியாயமான மாற்றுவழியை வலுப்படுத்தல்

கொள்கை விளக்கம் 2023

# முக்கிய ஆய்வு முடிவுகள்

சனசமூக மத்தியஸ்த சபைகளை அணுகியவர்களில் **89%** பேர், தங்கள் பிணக்குகள் தீர்க்கப்பட்ட விதத்தில் திருப்தி அடைவதாகக் கூறினர்.

பெரும்பாலான பதிலளித்தவர்கள், பாரம்பரிய முறையான நீதி முறையைப் பயன்படுத்துவதை விட, தங்கள் பிணக்குகளைத் தீர்க்க ADR பொறிமுறைகளைப் பயன்படுத்துவது **மலிவானது** மற்றும் **விரைவானது** என்பதை உறுதிப்படுத்தினர்.

பதிலளித்தவர்களில் **67%** எந்த ADR மன்றத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

சனசமூக மத்தியஸ்த சபைகளைப் பயன்படுத்திய **80%** பேர் எதிர்காலத்தில் அவற்றை மீண்டும் பயன்படுத்த வாய்ப்புள்ளது.



# 1 அறிமுகம்

சமூக-அடிப்படையிலான மாற்றுவழி பிணக்குத் தீர்வு (Alternative Dispute Resolution - ADR) பொறிமுறைகள் பிணக்குகளைத் தீர்ப்பதிலும், மோதல்கள் வெளிப்படையான வன்முறையாக மாறுவதைத் தடுப்பதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. பல பரிமாணங்களில் சமூக பதட்டங்கள் வெளிவரும் இலங்கையில், சமூக-அடிப்படையிலான ADR முன்முயற்சிகள்[1] நீதியை அணுகுவதற்கான பயனுள்ள வழிகளை வழங்குகிறது. இலங்கையில், இத்தகைய சமூக அடிப்படையிலான ADR பொறிமுறைகள், மதங்களுக்கு இடையிலான குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் (Civil Society Organisations - CSO) நிறுவப்பட்ட பல வகையான பிற முயற்சிகளை உள்ளடக்கியது. கூடுதலாக, இலங்கை 300 க்கும் மேற்பட்ட சனசமூக மத்தியஸ்த சபைகள் (Community Mediation Boards - CMB) மூலம் நன்கு நிறுவப்பட்ட தேசிய மத்தியஸ்த திட்டத்தைக் கொண்டுள்ளது, அங்கு சுமார் 8,400 நன்கு பயிற்சி பெற்ற தன்னார்வ மத்தியஸ்தர்கள் வருடத்திற்கு சுமார் 250,000 பிணக்குகளைக் கையாளுகின்றனர். இச்சூழலில், இது போன்ற கொள்கை விளக்கத்தின் மூலம், அத்தகைய முயற்சிகளுக்கான அணுகலை வலுப்படுத்துவதற்கும் அதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் முதல் படியாக, சமூக அடிப்படையிலான ADR பொறிமுறைகளை - குறிப்பாக CMBகளை - மக்கள் அணுகுவது மற்றும் அவற்றை பற்றின அவர்களின் விழிப்புணர்வு, ஆகியவற்றை புரிந்துகொள்வது அவசியமாகும்.

[1] இந்தக் கொள்கை விளக்கத்தின் நோக்கங்களுக்காக, சமூக-அடிப்படையிலான ADR முன்முயற்சிகள் மதத் தலைவர்கள், அரசாங்க நிர்வாக அதிகாரிகள் மற்றும் சனசமூக மத்தியஸ்த சபைகள் (CMB) போன்ற பிணக்குகளைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் பொறிமுறைகளைக் குறிக்கின்றன.

பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஆசியா நிலையத்துடன் இணைந்து நான்கு வருட காலத்துக்கு (2020-2024) இலங்கையில் செயல்படுத்தும் பிரிட்டிஷ் கவுன்சிலால், ஒரு **அறிவு, மனப்பாங்கு மற்றும் நடைமுறைகள் (Knowledge, Attitudes and Practices - KAP)** கருத்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. பிணக்குத் தீர்வு பொறிமுறைகளின் செயல்திறன் மற்றும் பரவலை மேம்படுத்துவதற்கும், இலங்கையில் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமூக-அரசு ஈடுபாட்டை மேலும் மேம்படுத்துவதற்கும் SEDR முயற்சிக்கிறது. மத்தியஸ்த சபைகள் (சனசமூக மத்தியஸ்த சபைகள் மற்றும் சிறப்பு காணி மத்தியஸ்த சபைகள் ஆகிய இரண்டும்) உட்பட பல்வேறு சமூக அடிப்படையிலான ADR முன்முயற்சிகள் பற்றிய பொது விழிப்புணர்வின் ஆரம்ப மதிப்பீட்டை வழங்குவதே KAP கருத்தாய்வின் நோக்கமாகும்.



இந்தக் கொள்கை விளக்கமானது KAP கருத்தாய்வின் போது ஆராயப்பட்ட மூன்று முக்கிய கருப்பொருள்களைச் சுற்றியுள்ள கண்டுபிடிப்புகளை வழங்குகிறது:

## ADR பற்றி மக்களுக்கு என்ன தெரியும்?

## ADR பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

## ADR பற்றி மக்களின் அனுபவம் என்ன?

ஆய்வுத் தரவுகளின் முழுமையான மற்றும் விரிவான பகுப்பாய்வை, Knowledge, Attitudes and Practices Survey[2] ஆய்வின் இறுதி அறிக்கையில் பார்க்கலாம்.

[2] ஜூன் 2022, www.sedrsrilanka.org/ இல் பார்க்கலாம்



# 2 KAP கருத்தாய்வைப் பற்றி

2021/22 இல் நடத்தப்பட்ட KAP கருத்தாய்வைப் பற்றி - CMB கள் குறித்து இறுதியாக எடுக்கப்பட்ட மதிப்பீட்டிலிருந்து 10 ஆண்டுகளுக்கு பிறகு இடம்பெற்ற - இந்த ஆய்வு, நாட்டில் உள்ள ஆறு மாவட்டங்களை உள்ளடக்கியது, மேலும் மூன்று முக்கிய இனக்குழுக்களின் 1,712 குடும்பங்களை இலக்காகக் கொண்டது. அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைத் தவிர, கொழும்பு மாவட்டத்திலிருந்து (மாநகர சபைப் பகுதிக்குள்) ஒரு வரையறுக்கப்பட்ட மாதிரியானது ஒப்பீட்டுக் கூறுகளை வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. எண்ணியல் ஆய்வுக்காக, ஆராயப்பட்ட குடும்பங்கள் அந்தந்த கணக்கெடுப்பு மாவட்டங்களில் மக்களின் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், பிரதேச செயலகப் பிரிவுகள்[3] மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

கூடுதலாக, சனசமூக மத்தியஸ்தம் மற்றும் மாற்றுவழி பிணக்குத் தீர்வு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுடன் இருபத்தொன்பது (29) முக்கிய தகவலாளர் நேர்காணல்கள் (KII) மற்றும் CSO பிரதிநிதிகள், சனசமூக மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் மற்றும் பெண்கள் மற்றும் இளைஞர்களுடன் 25 கவனக் குழு கலந்துரையாடல்கள் ஆறு மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

[3] இலங்கை 25 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்ட செயலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்கள் 256 பிரதேச செயலகங்களாக பிரிக்கப்பட்டு, மேலும் இவை சுமார் 14,008 கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

கருத்தாய்வுகளின் ஒட்டுமொத்த முடிவுகளை நோக்கும் போது, CMB களில் நடைமுறைப்படுத்தும் செயல்முறை தொடர்பாக தெளிவான விளக்கத்தில் (அறிவு) இடைவெளி உள்ளது. எனவே, கருத்தாய்வு முடிவுகள் CMB இல் தேசிய மற்றும் பிராந்திய ரீதியாக பொருந்தக்கூடிய மற்றும் பயனுள்ள விழிப்புணர்வு திட்டங்களை உருவாக்க உதவுகின்றன.




படம் 1: கருத்தாய்வின் இலக்கு மாவட்டங்கள்





# 3 மாற்றுவழி பிணக்குத் தீர்வு பற்றி மக்களுக்கு என்ன தெரியும்?

பொதுவாக, CMBகள் உட்பட சமூக-அடிப்படையிலான ADR முயற்சிகளில் யார் ஈடுபடுகிறார்கள் என்பதை மக்கள் அறிவார்கள், ஆனால் சிறப்பு காணி மத்தியஸ்த சபைகளைப் பற்றி மிகக் குறைவாகவே அறிந்திருக்கிறார்கள். மேலும், CMB களின் நோக்கம், அது எவ்வாறு செயல்படுகிறது, மத்தியஸ்த சேவைகளை எவ்வாறு அணுகுவது மற்றும் சபைகளில் அமர்வோர் ஆகியவை பற்றிய மக்களின் அறிவு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது, மற்றும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. CMB களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக விழிப்புணர்வில் உள்ள இந்த இடைவெளியை நிவர்த்தி செய்ய கவனம் செலுத்த வேண்டும்.

**பெரும்பாலான மக்கள் தங்கள் பிரச்சினைகளை மற்றவர்களிடம் சொல்ல விரும்புவதில்லை. (பள்ளிவாசல்) நம்பிக்கையாளர் சபை பிணக்குகளைத் தீர்க்க தங்களால் இயன்றவரை முயற்சிக்கிறது. பள்ளிவாசல் ஏழை மக்களுக்கு எண்ணற்ற சேவைகளை செய்துள்ளது. நாம் வெளியே சொல்ல முடியாத பிரச்சனைகளை இது கையாள்கிறது. தங்களிடம் வரும் நபர்களின் ரகசியத்தன்மையையும் பேணுகிறார்கள். (கவனக் குழு விவாதம், பெண்கள் மற்றும் இளைஞர்கள், மொனராகலை)**

## 3.1 ADR இல் யார் ஈடுபடுகிறார்கள்?

பெரும்பாலான பதிலளித்தவர்கள் அரசாங்க அதிகாரிகளை (பொலிஸ் - 69% மற்றும் கிராம அதிகாரிகள் - 61%) தங்கள் சமூகத்தில் உள்ள பிணக்குகளைக் கையாளும் ஈடுபாட்டாளர்களாக அடையாளம் காட்டுகின்றனர். ஒரு பகுதியினர் (27%) சனசமூக மத்தியஸ்த சபைகளை ADR ஈடுபாட்டாளர்களாக அடையாளம் காட்டுகின்றனர். இலங்கை சோனகர் சமூகம் ஏனைய இனக்குழுக்களுடன் ஒப்பிடுகையில், மதத் தலைவர்களை ADR இல் ஈடுபடுபவர்களாக அதிகம் அடையாளம் கண்டது.

படம் 2: பதிலளித்தவர்களால் கூறப்பட்ட முக்கிய மாற்றுவழி பிணக்குத் தீர்வு பொறிமுறைகள்




## 3.2 CMBகள் குறித்த அடிப்படை விழிப்புணர்வு நிலைகள் அதிகமாக இருந்தன

பதிலளித்தவர்களில் 89% பேர் CMBகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும், கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிலளித்தவர்கள் மற்றும் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள், ஏனைய மாவட்டங்கள் மற்றும் பிற வயதினருடன் ஒப்பிடும்போது, ஒப்பீட்டளவில் குறைவாக (முறையே 30% மற்றும் 60% மட்டுமே) CMB களைப் பற்றி கேள்விப்பட்டுள்ளனர்.

படம் 3: நான் சனசமூக மத்தியஸ்த சபைகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்




## 3.3 CMBகளின் குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் செயல்முறை பற்றிய அறிவு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது

CMB களைப் பற்றி கேள்விப்பட்டிருந்தாலும். பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் CMBகளின் விவரங்கள் மற்றும் செயல்முறைகள் பற்றி அறிந்திருக்கவில்லை. தீர்க்கப்பட்டமைக்கான சான்றிதழை வழங்குதல், பிணக்கிற்காக ஒதுக்கப்பட்ட நேரம் மற்றும் CMB இல் சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் விவாதிக்கப்பட்ட தகவல்களை நீதிமன்றங்களில் பயன்படுத்த முடியுமா போன்ற விஷயங்களில் குறைந்த அறிவு நிலைகள் காணப்பட்டன.

படம் 4: CMB கள் பற்றிய பின்வரும் குறிப்பிட்ட விவரங்கள் எனக்குத் தெரியாது



## 3.4 சிறப்பு மத்தியஸ்த சபைகள் (SMB)[4] பற்றிய விழிப்புணர்வு நிலைகள் மிகவும் குறைவாக இருந்தன

சிறப்பு மத்தியஸ்த சபைகள் (காணி) தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கும் மாவட்டங்களில் கூட, சிறப்பு மத்தியஸ்த சபைகளின் இருப்பு, செயல்பாடுகள் மற்றும் பின்பற்றும் செயல்முறை குறித்து பதிலளித்தவர்களுக்கு மிகக் குறைவான விழிப்புணர்வு இருப்பதை பண்பியல் ஆய்வு வெளிப்படுத்துகிறது. மாவட்டத்தில் சிறப்பு காணி மத்தியஸ்த சபைகள் இருந்த போதிலும், காணி தகராறுகள் இன்னமும் CMB களுக்கு தெரிவிக்கப்படுவதாக பதிலளித்தவர்கள் கருதுகின்றனர். CMB களைப் போலன்றி, சிறப்பு மத்தியஸ்த சபைகள் ஒப்பீட்டளவில் புதியவை. மேலும், மாவட்ட அளவில் அமைந்துள்ளன, இதனால் சமூகங்களுடன் ஓர் இடைவெளியை உருவாக்குகின்றன. SMB கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததற்கு இந்த இடைவெளி காரணமாக இருக்கலாம்.

## 3.5 பதட்டங்கள் வன்முறையாக மாறுவதைத் தடுப்பதற்கான முக்கியமான பொறிமுறைகளாக ADR மற்றும் CMBகள் கருதப்படுகின்றன

பண்பியல் ஆய்வு கலந்துரையாடல்களின் போது ஒரு சமூக மட்டத்தில், இனக்கலப்பு காணப்பட்ட பெரும்பாலான ஆய்வு தளங்களில் குழுக்களிடையே மோதல்கள் இனங்கள் அடிப்படையில் வன்முறையாக அதிகரிக்கும் போக்கு - மற்றும் அத்தகைய பதட்டங்கள் இன கலவரங்களில் விளைவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை முன்னிலைப்படுத்தப்பட்டன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பல்வேறு பிணக்குகளில் சிக்கியிருக்கும் குழுக்களிடையே சந்தேகத்தை நிவர்த்தி செய்வதும் நம்பிக்கையைப் பெறுவதும் முக்கியமானதாகக் காணப்பட்டது, மற்றும் ADR பொறிமுறைகள் இந்தப் பாத்திரத்தை வகிப்பதாக நம்பப்படுகிறது.

**அமைப்பில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் அதேவேளை மாற்றத்தை உருவாக்குவதற்கும், ADR ஐ வலுப்படுத்துவதற்கும் தெளிவான தேவை மற்றும் வாய்ப்பு உள்ளது:** பதிலளித்தவர்களில் 73 சதவீதம் பேர், CMB செயல்முறையைப் பற்றி மேலும் அறிய விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர். சனசமூக மத்தியஸ்த சபைகள் சமூக ஒற்றுமையை பேண உதவுவதாக கருதப்பட்டாலும், சாதி, பணம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவது தொடர்பான நீண்டகால சர்ச்சைகள் CMBகளின் செயல்திறனைக் குறைக்கும் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

[4] 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம் 2, 3, மற்றும் 8 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை.



# 4 ADR பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

## 4.1 ADR எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது?

ADR பொறிமுறை எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது என்பது தொடர்பாக குறிப்பிட்ட ஈடுபாட்டாளர்கள் சம்பந்தமாக விசேட காரணிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. CMB கள் பிரச்சனையை நேர்மறையாக கையாள்வது மற்றும் சரியாக/சமமாக தீர்ப்பதும், மேலும் சர்ச்சையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையுடன் பணி புரிவதும், ஆர்வ அடிப்படையிலான மத்தியஸ்த அணுகுமுறைகளைப் பாராட்டுவதைச் சுட்டிக்காட்டுகிறது. மறுபுறம் அரசாங்க அதிகாரிகள் தங்கள் சமூகங்களைப் பற்றிய உயர் மட்ட அறிவுள்ளவர்களாகவும், சமயத் தலைவர்கள் பிணக்குத் தீர்வுக்கு சமமான/நியாயமான நிலைப்பாட்டை எடுப்பவர்களாகவும் காணலாம்.

## 4.2 ADR இல் வெவ்வேறு ஈடுபாட்டாளர்கள் ஏன் பிணக்குகளை நன்றாக நிர்வகிக்கிறார்கள்?

குறிப்பிட்ட சமூகம் அடிப்படையிலான ADR பொறிமுறைகள் பயனுள்ளவை என்று மக்கள் ஏன் நினைக்கிறார்கள் என்று கேட்டபோது, அவர்கள் மாறுபட்ட மற்றும் குறிப்பிட்ட ஈடுபாட்டாளர்கள் சம்பந்தமாக காரணங்களை வழங்கினர்.

**சனசமூக மத்தியஸ்த சபைகள் (CMB):** CMB களை பொறுத்தவரையில், மேற்கோள் காட்டப்பட்ட காரணங்கள், பிணக்கை நேர்மறையாகக் கையாள்வது, பிரச்சினையை சரியாக/சமமாகத் தீர்ப்பது மற்றும் பிணக்கைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை ஆகியவை அடங்கும்.

படம் 5: CMB ஏன் பிணக்குகளை நன்றாக நிர்வகிக்கிறது?




**அரசாங்க அதிகாரிகள் (முக்கியமாக கிராம அதிகாரிகள்) மற்றும் மதத் தலைவர்கள்:** அரசாங்க அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் மக்களால் மதிக்கப்படுவதால், பிணக்குகளை நன்கு தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது.

படம் 6: அரசாங்க அதிகாரிகள் ஏன் பிணக்குகளை நன்றாக நிர்வகிக்கிறார்கள்?




படம் 7: மதத் தலைவர்கள் ஏன் பிணக்குகளை நன்றாக நிர்வகிக்கிறார்கள்?



படம் 8: பொலிஸ் ஏன் பிணக்குகளை நன்றாக நிர்வகிக்கிறது?




**பொலிஸ்:** புகார் செயல்பாட்டில், வழக்கமாக முதல் அல்லது இரண்டாவது தொடர்புப் புள்ளியாக, பிணக்குத் தீர்வில் காவல்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, அவர்கள் பயன்படுத்தும் அதிகாரம் மற்றும் பலம், மற்றும் எளிதான அணுகல் மற்றும் பதிலளிப்பு நேரங்களை கருதி மக்கள் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு காவல்துறையைப் பயன்படுத்த விரும்பினாலும், மக்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான தூரம் மற்றும் மொழித் தடைகள் மக்களைக் காவல்துறையைப் பயன்படுத்துவதைக் குறைக்கிறது.

## 4.3 CMB கள் மற்றும் மதத்தலைவர்களால் செலவு குறையும் மற்றும் நேரம் சேமிக்கப்படும்

சமூக அல்லது தனிப்பட்ட பிணக்குகளைத் தீர்க்க மதத் தலைவர்கள் மற்றும் CMB களை அணுகுவது மலிவானது மற்றும் விரைவானது. பிரச்சனையை தீர்ப்பதற்காக நீதிமன்றம் சென்றால் அதிக பணம் செலவழிக்க வாய்ப்புள்ளதாக 64% சதவீதம் பேர் கூறியுள்ளனர், அதை தொடர்ந்து காவல்துறையை பற்றி 40% அதையே கூறினர்.

படம் 9: தனிப்பட்ட அல்லது சமூக பிணக்கைத் தீர்ப்பதற்கான செலவு மற்றும் நேரம் குறித்த புரிவு



## 4.4 ADR களின் அங்கமாக யார் இருக்க வேண்டும், யார் தலைமை வகிக்க வேண்டும்?

பதிலளித்தவர்களில் 67% எந்த ADR மன்றத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். ADR மன்றத்தின் சிறந்த தலைவர் என வரும்போது, பெரும்பாலான ஆண்கள் ஆண் தலைவரை விரும்புகின்றனர், மேலும் பதிலளித்தவர்களில் பெண்களும் பெண் தலைவரை விட ஆண் தலைவரையே விரும்புகின்றனர். இலங்கையில் சனசமூக மத்தியஸ்தத்தில் பெண்களின் பங்கு பற்றிய முந்தைய ஆய்வுக் கண்டுபிடிப்புகளை இது உறுதிப்படுத்துகிறது. அது "மத்தியஸ்தராக வயதான ஆண்"[5] என்பவரை(ஒருவரை) விரும்புவதை அடையாளம் காட்டுகிறது.

இருப்பினும், கடந்தகால ஆய்வுகளின்படி பெண்களால் ஆற்றுப்படுத்தப்படும் உணர்வுபூர்வமான குடும்ப தகராறுகளைப்பற்றி கலந்துரையாடும்போது பெண் மத்தியஸ்தர் ஒருவரின் பிரசன்னம் விரும்பப்படுவதையும் காட்டுகின்றது.

## 4.5 ADR மன்றங்களில் பாலினப் பிரதிநிதித்துவம்

படம் 10: பதிலளித்தவர்களுக்கு அமைய ADR மன்றத்திற்கான சிறந்த பாலின அமைப்பு




[5] Community Mediated Justice in Post-War Sri Lanka (2016), de Silva, Jayasundere, and Rahman.
[6] Community Mediation (2028), Munas et al.

**ADR இன் தற்போதைய பலத்தை கட்டியெழுப்பவும் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்குமான வாய்ப்புகள்:** குறிப்பிட்ட ADR பொறிமுறைகள் குறிப்பிட்ட பிணக்குகளைத் தீர்ப்பதில் பயனுள்ளதாக இருக்கும். எனவே, ADR பொறிமுறைகளின் செயல்திறனைப் புரிந்து கொள்ள அவை தீர்க்கும் பிணக்குகளின் அடிப்படையில் அவற்றை நெருக்கமாக பார்ப்பது அவசியம். ADR பொறிமுறைகள் பொதுவாக குறைந்த நேர மற்றும் பணம் செலவில் ஒரு தீர்வுக்கு வருவதில் பயனுள்ளதாக இருக்கும். எவ்வாறாயினும், அதிகாரமற்ற, ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் கொண்டு வரும் நியாயமான குறைகளை எடுத்துப் பேசுவது அல்லது மத்தியஸ்தம் செய்யும் போது, குறிப்பாக முறையான நீதித்துறை செயல்முறைகளை அணுகுவதற்கான ஏழை மக்களின் உரிமை ஆகியனவை குறித்து முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

படம் 11: பதிலளித்தவர்களுக்கேற்ப ADR மன்றத்திற்கான சிறந்த தலைவர்



# 5 ADR பற்றிய மக்களின் அனுபவம் நமக்கு என்ன காட்டுகிறது?



## CMB களை அணுகியவர்கள் தங்கள் பிணக்கின் தீர்வில் மிகவும் திருப்தி அடைந்துள்ளனர்.

சனசமூக மத்தியஸ்த சபைகளை அணுகியவர்களில் 89 சதவீதம் பேர், பிணக்கு தீர்க்கப்பட்ட விதத்தில் திருப்தி அடைந்ததாகக் கூறியுள்ளனர். CMB க்கு சென்றவர்கள் மீண்டும் CMB க்கு செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். இது விழிப்புணர்வை உருவாக்கி அதன் மூலம் மக்களுக்கு CMB களை அணுக ஊக்குவிக்க இருக்கும் மாபெரும் வாய்ப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## 5.1 பிணக்குத் தீர்வு செயல்முறையில் திருப்தி நிலை

படம் 12: பிணக்குத் தீர்வில் திருப்தி அடைந்த தரப்பினர்




## 5.2 CMB களுக்குச் சென்றவர்கள் மீண்டும் அவற்றைப் பயன்படுத்த வாய்ப்பு அதிகம்

CMB களைப் பயன்படுத்தியவர்களில் 80% பேர் தாங்கள் மீண்டும் CMBகளைப் பயன்படுத்த வாய்ப்புள்ளதாகக் கூறியுள்ளனர், அதேசமயம் CMBகளைப் பயன்படுத்தாதவர்கள் எதிர்காலத்தில் CMBகளைப் பயன்படுத்துவதற்கான குறைந்த போக்கைக் காட்டியுள்ளனர். CMB ஐப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று குறிப்பிடுபவர்கள், எளிதான அணுகல், செலவு குறைவு அல்லது செலவு அற்றமை, குறுகிய செயல்முறை, செயல்பாட்டின் நம்பிக்கை மற்றும் தீர்வுகள் பயனுள்ளதாக இருப்பது ஆகியவை தங்கள் விருப்பத்திற்கான காரணங்களாகக் குறிப்பிடுகின்றனர்.

படம் 13: மீண்டும் CMB ஐப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் - இதற்கு முன்பு CMB க்கு வந்தவர்கள்




**CMB-ஐப் பயன்படுத்தியவர்கள் அதில் பெற்ற அதிக அளவு திருப்தியை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்:** CMB-ஐ அணுகியவர்களிடையே திருப்தி நிலைகள் அதிகமாக இருப்பது ஒரு நேர்மறையான சிறப்பம்சமாகும், மேலும் இது எதிர்கால விழிப்புணர்வு பிரச்சாரங்களில் மையமாக இருக்க வேண்டும். குறிப்பாக, CMBகளை பயன்படுத்தாதவர்கள் அதை அணுகுவதில் வாய்வழி பரிந்துரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றதால் இத்தகைய பிரச்சாரங்கள், CMB இன் தீர்மானம் பாதகமாக இருக்கும் போது, பிணக்குக்காரர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தும் காரணிகளை மதிப்பீடு செய்து அதை எடுத்துரைக்க வேண்டும்.



# 6 திறன்கள் மற்றும் திறமைகள்

## 6.1 மத்தியஸ்தர்கள் நியமனம்

முந்தைய ஆய்வுகள் அதிகமான பெண்கள் மத்தியஸ்தர்களாக ஆகுவதை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன, ஆனால் அதேநேரம் அவர்கள் வீட்டில் எதிர்கொள்ள வேண்டிய கூடுதல் பராமரிப்புச் சுமைகளையும் எடுத்துக்காட்டுகின்றன. இது மத்தியஸ்தம் போன்ற தன்னார்வ வேலைகளில் அவர்களின் பங்கேற்பைக் குறைக்கிறது.[7] மேலும், பெரும்பாலான சனசமூக மத்தியஸ்த சபைகளின் சராசரி வயது அமைப்பு 50 வயதுக்கு மேல் உள்ளது. மத்தியஸ்தர்கள் மற்றும் CMB களின் தலைவர்களுடனான கலந்துரையாடல்கள் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் கடமைகள் (உதாரணமாக மேலதிக கல்விக்கு தேவையான நேரம்) இளைஞர்கள் மத்தியஸ்தத்தில் பங்கேற்பதைக் கட்டுப்படுத்துகிறது என சுட்டிக்காட்டியது. இருப்பினும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் சிறந்த தகவல் மேலாண்மைக்கான தேவைகள் இருக்கும் பின்னணியில், பொதுவாக CMB களின் திறம்பட செயல்பாட்டிற்கு இளைஞர்கள் மற்றும் முதியவர்களிடையே சிறந்த சமநிலை அவசியம் என்று உடன்பாடு இருந்தது.

[7] (Jayasundere and Rahman, 2016; Jayasundere and Valters, 2014)

## 6.2 மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி

மத்தியஸ்தம் தொடர்பான பல அம்சங்களை உள்ளடக்கியதால், நியமன கட்டத்தில் வழங்கப்பட்ட ஐந்து நாள் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று பெரும்பாலான மத்தியஸ்தர்கள் கருத்து தெரிவித்தனர். எவ்வாறாயினும், சமூகத்திற்கு சிறந்த சேவையை உறுதிசெய்ய ஆர்வ அடிப்படையிலான மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்த செயல்முறையின் கொள்கைகளின் அடிப்படையில் சீரான இடைவெளியில் வழங்கப்படும் ஒரு 'புத்துணர்வூட்டும் பயிலரங்குகள்' தேவை என்று மத்தியஸ்தர்கள் மற்றும் மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்கள் (MTO) கருதினர்.

## 6.3 வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு

வளங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, தகவல் தொழில்நுட்ப (IT) உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் சிறந்த தகவல் மேலாண்மை, தரவு சேகரிப்பு, பயனுள்ள பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கான பயிற்சியின் தேவையை மத்தியஸ்தர்கள், CMB களின் தலைவர்கள் மற்றும் MTO களால் எடுத்துக்காட்டப்பட்டது. மேலும், ஆய்வு செய்யப்பட்ட சில இடங்களிலாவது (CMB க்கு) பொருத்தமான இடம் இல்லாதது குறித்து பேசப்பட்டது. இது முன்னர் பேசப்பட்ட தனியுரிமை இல்லாத பிரச்சினையை உறுதிப்படுத்துகிறது.

**மத்தியஸ்த சபைக்கு நிரந்தர இடம் இல்லை. செலவைக் குறைக்க, பொது கட்டிடங்களில் இந்த மத்தியஸ்த சபையை அரசு செயல்படுத்துகிறது. சுமார் 5 குழுக்கள் இருப்பார்கள் (5 பிணக்குகள் ஒரு பொது மண்டபத்தில் மத்தியஸ்தம் செய்யப்படுகின்றன). எனவே, மத்தியஸ்தத்தில் இரகசியத்தன்மையை உறுதிசெய்யும் அடிப்படைக் கொள்கை இது போன்ற நிகழ்வுகளில் பின்பற்றப்படுவதில்லை. (KII, திருகோணமலை)**



# 7 முடிவுரை

## அறிவு

சமூக மட்டத்தில் ADR பொறிமுறைகள் இருப்பது, பதட்டங்கள் பெரிய மோதல்களாக அல்லது வன்முறையாக மாறுவதைத் தடுக்க உதவுகிறது. இந்த முயற்சிகள் சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கம் மற்றும் ஒட்டுமொத்த அமைதிக்கு பங்களிக்கின்றன.

பொதுவாக ADR பற்றிய அறிவு/விழிப்புணர்வு அணுகல் மற்றும் அருகாமையால் பாதிக்கப்படுகிறது.

பொதுவாக, CMB இருப்பதைப் பற்றி மக்களுக்குத் தெரியும், ஆனால் அதன் நோக்கம், அது எவ்வாறு செயல்படுகிறது, CMB ஐ எவ்வாறு அணுகுவது மற்றும் CMB இல் உள்ளவர்கள் ஆகியவை பற்றிய அறிவு மாறுபடும். இளம் வயதினர், பெண்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மற்றும் சோனகர் மத்தியில் CMB கள் பற்றிய அறிவு பலவீனமாக இருந்தது.

உயர் விழிப்புணர்வு நிலைகள் பெரும்பாலும் CMB களை தங்கள் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அணுகிய அல்லது செயல்பாட்டில் தங்கள் சகாக்களுக்கு உதவியவர்களிடையே அதிகம் காணப்பட்டது.

ADR மன்றத்தின் மிகவும் பொருத்தமான அமைப்பில் - பதிலளித்தவர்களின் கருத்துப்படி - கிராம அதிகாரி போன்ற அரசாங்க அதிகாரிகள், கிராமப் பெரியவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் அடங்குவர்.

CMB களின் செயல்பாடுகள் பொறுத்தவரையில், குடும்ப தகராறுகள் போன்ற முக்கியமான பிணக்குகள் ADR பொறிமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றதால், ADR மற்றும் CMB க்கள் தரப்பினர்களின் தனிப்பட்ட வாழ்க்கை விடயங்களின் இரகசியத்தன்மைக்கு உத்தரவாதம் அளிப்பது முக்கியமானது.

## மனப்பாங்கு

மக்கள் CMB களையும் மதத் தலைவர்களையும் செலவு குறைந்த மற்றும் நேரத்தைச் சேமிக்கும் பிணக்குத் தீர்வு முறைகளாக உணர்கிறார்கள். எவ்வாறாயினும், சாதி, பணம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்பலாம் என்பது தொடர்பான நீண்டகால வாதங்கள் CMBகளின் செயல்திறனைக் குறைக்கும் காரணங்களாகக் குறிப்பிடப்பட்டன.

மக்கள் அதிக அணுகல் மற்றும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான அதன் அதிகாரப்பூர்வ பலத்தின் மீது நம்பிக்கை கொண்டு காவல்துறையிடம் செல்கின்றனர். எவ்வாறாயினும், காவல்துறையில் எதிர்கொள்ளும் மொழித் தடைகள் போன்றவை, தீர்வு செயல்முறைகளைக் கட்டுப்படுத்துவதாகக் காணப்படுகிறது.

ADR பொறிமுறைகளில் உள்வாங்கப்படுபவர்கள் பற்றிய கருத்துகளின் அடிப்படையில், ADR உறுப்பினர்களாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் முக்கியமானதாகக் கருதப்படும் போதும், சமூகத்தில் நிலவும் நீண்டகால பாலினக் கருத்துக்கள், மத்தியஸ்தர்களாகவும் ADR செயற்பாட்டாளர்களாகவும் பெண்கள் செயற்படுவது குறித்து கேள்வி எழுப்புகின்றன.

ADR மன்றங்களின் தலைமைத்துவம் பற்றி பேசும் போது, பெரும்பான்மையான ஆண்களும் பெண்களும் மன்றத்தின் ஆண் தலைவரை விரும்புகின்றனர், இது பொதுவாக மத்தியஸ்தர் அல்லது தலைவராக “நடுத்தர வயது ஆண்” வேண்டும் என்பது பாலின சமூக விதிமுறைகளை எடுத்துக்காட்டுகிறது.

## நடைமுறைகள்

அதிக பங்கேற்பு, அமைப்பின் நெகிழ்வுத்தன்மை மற்றும் ADR அமைப்புகளால் வழங்கப்படும் விரிவான தேர்வுகள், குறிப்பாக CMBகள் ஆகியவை இந்த அமைப்பிற்கான மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் சில காரணங்களாகும்.

ADR பொறிமுறைகளை அணுகுவதற்கான மக்களின் நடைமுறைகள், அத்தகைய அமைப்புகளுடன் அவர்களின் அல்லது அவர்களது சகாக்களின் அனுபவத்திலிருந்து வெளிப்படுகின்றன.

ADR “செலவு குறைந்த” தேர்வாகக் கருதப்படுவதால், மிகவும் தீவிரமான வழக்குகளில், முறையான நீதித்துறை செயல்முறைகளை அணுகுவதில் இருந்து ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் கவனத்தை இழக்க இது வழிவகுக்கும் அபாயம் உள்ளது. எனவே, இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்கவும், விதிமுறைகளின்படி, முறையான தீர்வு பொறிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, நிதி மற்றும் நேர சேமிப்பு ஆகியவற்றுடனான பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவையாக இப்பொறிமுறையில் கவனம் செலுத்தி CMB கள், அதன் ஆணை, செயல்பாடுகள், மற்றும் அமைப்பு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

வளங்களைப் பொறுத்தவரை, தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் பற்றாக்குறை மற்றும் சிறந்த தகவல் மேலாண்மை, தரவு சேகரிப்பு, பயனுள்ள பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்புக்கான பயிற்சியின் தேவை ஆகியவை மத்தியஸ்தர்கள், CMB தலைவர்கள் மற்றும் MTO களால் முன்னிலைப்படுத்தப்பட்டன.





# 8 பரிந்துரைகள்

சமூக-அடிப்படையிலான ADR, குறிப்பாக CMB கள், பதட்டங்கள் அதிகரிப்பதைத் தடுப்பதன் மூலம் சமூக ஒற்றுமையை எளிதாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன, ADR பற்றிய சமூக நிலை விழிப்புணர்வை அதிகரிக்கவும் அவற்றின் செயல்திறனை அதிகரிக்கவும் பின்வரும் படிகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

- பொதுவாக ADR இன் அணுகல் மற்றும் செயல்முறை மற்றும் குறிப்பாக CMB கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கான இலக்கு அணுகுமுறையை வடிவமைத்து தொடங்குதல்.

- மதத் தலைவர்கள் உட்பட ADR ஈடுபாட்டாளர்களுக்கு திறன்கள் மற்றும் அறிவு மேம்பாட்டு அமர்வுகளை நடத்துதல்.

- இலங்கை பொலிஸின் தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆராய்ச்சி ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் அவசியம். நம்பிக்கை, நம்பிக்கையை கட்டியெழுப்புதல், பக்கச்சார்புகளை நீக்குதல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துதல்.

- சம்பந்தப்பட்ட MTOக்கள், CMB தலைவர்கள் மற்றும் கிராம அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் போன்ற தொடர்புடைய அரசாங்க உத்தியோகத்தர்களிடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்த மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவைகளை இணைத்தல்.

- MTOக்கள் மற்றும் மத்தியஸ்தர்களின் பயிற்சி தேவைகளை தொடர்ச்சியான மதிப்பீடு செய்தல் மற்றும் புதுப்பித்தல்

- தேசிய மத்தியஸ்த திட்டத்திற்கான விரிவான, மையப்படுத்தப்பட்ட, இணைக்கப்பட்ட முகாமைத்துவ தகவல் அமைப்பை (Management Information System) வடிவமைத்து செயல்படுத்துதல்.

- CMBகள் நடத்தப்படும் இடத்தில் தனியுரிமையை உறுதிசெய்தல் மற்றும் இலகுபடுத்துதல்.

- நிதி சம்பந்த பிணக்குகளை கையாள்வதற்கான சிறப்பு மத்தியஸ்த சபைகள், மற்றும் சிறப்பு காணி மத்தியஸ்த சபைகள் தற்போது செயல்படாத மாவட்டங்களில் அறிமுகப்படுத்துதல்.



# குறிப்புகள்

# குறிப்புகள்

# நியாயமான மாற்றுவழியை வலுப்படுத்தல்

கொள்கை விளக்கம்

மார்ச் 2023

© Copyright

SEDR
Supporting Effective Dispute Resolution
එලදායීව ආරවුල් නිරාකරණයට සහයවීම
பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்

Part of the programme

STRIDE
STRENGTHENING TRANSFORMATION, RECONCILIATION AND INCLUSIVE DEMOCRATIC ENGAGEMENT

Funded by the European Union

Implemented by

BRITISH COUNCIL

The Asia Foundation

Supported by: Centre for Poverty Analysis (CEPA)

இந்த வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டது. அதன் உள்ளடக்கங்கள் SEDR இன் முழுப்பொறுப்பாகும், மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை அவசியமாக பிரதிபலிப்பதல்ல.

19, 1/1, De Fonseka Place, Colombo 04.
www.SEDRSriLanka.org
sedr@britishcouncil.org

@SEDRSriLanka

#SEDRtogether
#MakeGreatSTRIDES